வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   15.08.2025 வெள்ளிக்கிழமை   இதழ் : 227   பக்கங்கள் : 12




அரியாலை சித்துப்பாத்தியில்

# மேலும் மனித புதைகுழிகள் அகழ்வுக்கு 8 வாரம் தேவை!

## நீதிமன்றத்தில் சட்ட மருத்துவ அதிகாரி கோரிக்கை

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15

**அரியாலை சித்துப்பாத்தியில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. அகழ்வு பணிகளை மேற்கொள்ள 8 வாரங்கள் தேவை என்று சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன் மன்றில் அறிக்கை சமர்ப்பித்து கோரிக்கை வைத்துள்ளார்.**

இதைத் தொடர்ந்து, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் நேற்றைய தினம் கட்டளையிட்டார்.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது.

சித்துப்பாத்தி மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இரு கட்டங்களாக அகழ்வுப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2ஆம் கட்ட அகழ்வுக்கு 45 நாட்கள் அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கடந்த 6ஆம் திகதி வரை 32 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, அகழ்வு பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இரண்டாம் கட்ட அகழ்வின் மூன்றாவது பகுதி ஆய்வை 11



## செஞ்சோலை படுகொலை; நேற்று நினைவேந்தப்பட்டது

முல்லைத்தீவு, ஓக. 15

செஞ்சோலை மாணவர் படுகொலையின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை இடம்பெற்ற முல்லைத்தீவு - வள்ளிபுனம் - இடைக்கட்டு பகுதியில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் 11

## பொலிஸ் துறையை தூய்மைப்படுத்துவேன்

பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, ஓக. 15

"பொலிஸ் துறையில் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது. அதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன்", என்று பொலிஸ் மாஅதிபராக பதவியேற்ற பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து 11

## புதைகுழி அகழ்வு பணிகளில் சர்வதேச நிபுணத்துவம் தேவை

நீதிமன்றில் சுமந்திரன் சுட்டிக்காட்டு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 15

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளில் சர்வதேச நிபுணத்துவ உதவிகளை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மரபணு சோதனைகளை முன்னெடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், "செம்மணி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லக்கூடிய ஏதுநிலைகள் காணப்படுகின்றன", என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரியாலை (செம்மணி 11

மாகாண சபைகள் தேர்தல்:

## அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம்

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 15

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று ஆளும் - எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றமை வரவேற்கத்தக்கது", என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.


மாகாண சபைகள் தேர்தல் தொடர்பிலேயே 11

## சபாநாயகருக்கு எதிராக முறையிடுவதற்கு முடிவு

அர்ச்சுனா எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

பாராளுமன்றத்தில் 8 நாட்களாக மைக்ரோபோனை அணைத்து தனது உரையை இடை மறித்து ஊடக முடக்கம் ஏற்படுத்தியமை தொடர்பில் சபாநாயகருக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தில் (Inter-Parliamentary Union) முறைப்பாடு அளிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனா தெரிவித்துள்ளார். 11



## 1,391 சுற்றுலா பயணிகளுடன் யாழ். வருகிறது சொகுசு கப்பல்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 15

1,391 சுற்றுலா பயணிகளுடன் இந்தியாவின் அதி சொகுசு கப்பலான எம். வி. எக்ஸ்பிரஸ் இன்று வெள்ளிக்கிழமை யாழப்பாணம் வருகிறது என்று காங்கேசன்துறை துறைமுக அத்தியட்சகர் த. பகீரதன் தெரிவித்துள்ளார்.

10 தளங்களை பிரமாண்டமான இந்தக் கப்பல் இந்தியாவிலிருந்து புறப்பட்டு அம்பாந்தோட்டை, திருகோணமலை ஊடாக இன்று வெள்ளிக்கிழமை காங் கேசன்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இந்த கப்பலில் சுமார் 584 சிப்பந்திகள் 11

## ராஜிதவின் சொத்துகளை முடக்குவதற்கு நடவடிக்கை?

கொழும்பு, ஓக. 15

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்தும் தலைமறைவாக இருந்தால் அவரின் சொத்துகளை முடக்குவது குறித்து இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது என்று உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான கோப்புகளை தயாரித்து, கோரிக்கையாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்து நீதிமன்ற உத்தரவைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 11

## ஆதன வரி குறைக்கப்படாது; வவுனியா மாநகர சபை முடிவு

- குமார. கோகுலன் -

வவுனியா, ஓக. 15

வவுனியா மாநகர எல்லைக்குள் அறவிடப்படும் ஆதன வரியில் எந்த மாற்றமும் செய்வதில்லை. குடியிருப்பாளர்களுக்கு 8 வீதம் வர்த்தகர்களுக்கு 10 வீதம் என்ற அடிப்படையிலேயே வரியை அறவீடு செய்வது என்று வவுனியா மாநகர சபையின் விசேட அமர்விலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வவுனியா மாநகர சபையின் ஆதனவரி தொடர்பான விசேட அமர்வு நேற்று நடைபெற்றது. 11

## ஹர்த்தாலை புறக்கணிக்க கோருகின்றது சிவசேனை!

யாழ்ப்பாணம், ஓக. 15

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலை புறக்கணிக்குமாறு சிவ சேனை அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் பாலசிங்கம் செயமாறன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"உடைக்க வேண்டும் வளரும் வணிகத்தை - தடுக்க வேண்டும் மீண்டெழும் பொருளாதாரத்தை - வீழ்த்த வேண்டும் ஈழத்தின் விழுமியங்களை - கொளுத்த வேண்டும் தந்தை செல்வாவின் கொள்கைகளை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓம் தொலைக்காட்சி நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் நடத்தும் சைவம் தழைத்தோங்க நிகழ்வின் நேற்றுமுன்தினம் பதிவான காட்சிகள்....!

## தெய்வீக இசை அரங்கம்

வடமராட்சி, ஓக. 15


சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தெய்வீக இசை அரங்கம் நடைபெறவுள்ளது.

இதில், இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன் குழுவினர் தெய்வீக இசை நிகழ்வை வழங்குவர்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். (ஐ)

# சுன்னாகத்தில் திருடியவர் நாரந்தனையில் சிக்கினார்

### நகைகள், பணம், பொருட்கள் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 15

சுன்னாகத்தில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து தங்க நகைகள், கைபேசிகள் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை நாரந்தனை பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, அவர் தனது உடைக்குள் மறைத்து வைத்திருந்த தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள், பென்ரன்களை கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் அந்த நகைகள் சுன்னாகத்தில் திருடப்பட்டவை என்று தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து சந்தேகநபரின் வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அங்கு, கைபேசிகள், ஒரு தொகை பணம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டு, சந்தேகநபரையும் மீட்கப்பட்ட பொருட்களையும் ஊர்காவற்துறை பொலிஸார் ஒப்படைத்தனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

# செஞ்சோலை படுகொலை: வவுனியாவில் நினைவேந்தல்




வவுனியா, ஓக. 15

செஞ்சோலையில் இராணுவத்தின் விமான குண்டுவீச்சில் உயிரிழந்த மாணவர்களின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வவுனியாவிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 3098ஆவது நாளாக நடத்தி வரும் போராட்டத்திலேயே செஞ்சோலையில் படுகொலையான 61 மாணவியர் நினைவேந்தப்பட்டனர்.

இதன்போது உயிரிழந்தவர்களின் நினைவாக அகவணக்கம், மலர் அஞ்சலி செலுத்தப்பட்டன. (ஐ-10)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று....!

யாழ்ப்பாணம், ஓக. 15

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஓம் தொலைக்காட்சி நடத்தும் 'சைவம் தழைத் தோங்க...' நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறிப்படுத்தலில் மாணவன் நாகதீபன் ப்ரவஸ்மா தேவாரம் இசைப்பார். தொடர்ந்து, திருமதி தேவிகா சுமன் நெறியாள்கையில் பூர்ணா நர்த்தனாலய மாணவர்களான நதீஷா தினேஷ், திருஷ்டிகா சத்தியராஜன், சஜி தவராசா, ஆருசா தவக்குமார், கவிஸ்னா தவக்குமார், சிறீநயனிகா கௌரிசங்கர், நயனசிறீ கௌரிசங்கர், சயானுகா சிவநிதன், டவீனா அஜித்குமார், அக்ஷயா அனிஸ்ரன், டக்சிகா ரமேஷ் ஆகியோரின் நடன நிகழ்வு நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து, திருமதி லோஜனா டயானனின் நெறியாள்கையில் ஜெயவிமல கிருஷ்ணஜனா நர்த்தனாலய மாணவர்களான மயூரன் அக்ஷியா, பிரதீபன் ஜதுமிதா, சுமன் மகிஷ்மா, மோகன் ஸ்வர்சிகா, மயூரன் சுபிவிழி, நவரூபன் டினுசாலினி ஆகியோரின் காவடி நடனம் அரங்கேறும். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 15

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசை அரங்கு நிகழ்ச்சியில் பாட்டு - ரமண சர்மா லயசர்மா, சூரியகுமார் இசைவாணன், வயலின் - திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் - வரதராஜசர்மா ரமணசர்மா, கெஞ்சிரா - உ. பக்தவர்சலசர்மா, மோசிங் - ரமணசர்மா கான மிருதசர்மா கடம் - உதயகுமார் ஹிதுசன்.

இதன் பின்னர், பாட்டு - மருத்துவர் சாயி லக்ஷ்மி லோகீஸ்வரன், வயலின் - இராசரத்தினம் நிரோசன், மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன், கடம் - சிவகுமார் மாதுளன் பங்கேற்கும் இசையரங்கு நடைபெறும். (ஐ)

• • •

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

வேதாந்த மடம், சிறீ சிவகுருநாத பீட 8ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவசிறீசோ. கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில், இத்திருக் கூட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பேராதனை பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளர் சைவப்புலவர் ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் சிறப்பு அதிதியாகவும், கௌரவ அதிதிகளாக கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய ஓய்வுநிலை உப அதிபர் திருமதி தனவீரசிங்கம் மனோன்மணி, தொல்பொருள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் கமலநாதன் கயிலைவாசன், நல்லூர் சங்கிலியன் மன்ற நிர்வாக ஆலோசகர் இராசையா சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளை, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவின் வேவில் வீரசுத்தி விக்னேஸ்வரா அறநெறி பாடசாலை, வல்வை முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, திக்கம் மடத்துவாசல் சித்தி விநாயகர் அறநெறி பாடசாலை, மருதாம் புலம் பத்திரகாளி அம்பாள் கலைப் பயிற்சி நிலைய மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பருத்தித்துறைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ராகுலன் மாலதி வழங்குவார்.

சிறப்பு நிகழ்வுகளாக, செல்வி. வஸஜினி சிறீகரசர்மாவின்தனி நடன நிகழ்வும் நல்லூர் கீதவாகினி இசைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் பக்தி இசை நிகழ்வும் இணுவையூர் சிறீவள்ளி வில்லிசைக் குழுவினர் வழங்கும் வில்லுப்பாட்டு நிகழ்வும் சிவ நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் பரத நாட்டிய நிகழ்வும் நடைபெறவுள்ளன.

மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, நன்றியுரையினை, திக்கம், மடத்து வாசல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திருமதி பகீவன் சுகந்தி வழங்குவார். (ஐ)

# பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 03 - 1930



உதிர்வு 15 - 08 - 2012

## திருமதி இராசம்மா சுப்பையா

(கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை)

அன்னையாய் எங்களை அவனியில்
அவதரிக்க வைத்த தாயே
தாயும் தந்தையுமாய் எங்களை
இப்பாரினில் நன்மக்களாய்
வளர்த்தெடுத்து வாழ வைத்தாயே
காலச்சுழற்சியில் இறைவன் நியதியில்
காலனவன் உனைக் கவர்ந்து சென்று
ஆண்டுகள் பதின்மூன்றாகிற்றோ!
நாம் வாழும் வரை நின் நினைவுகள் வாழும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.08.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 30

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பாதுகாப்பு பிரதி அமைச்சரை எதிர்த்தல்

பாதுகாப்பு பிரதி அமைச்சரான அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருக்கிறது. இப்போதெல்லாம் சஜித் பிரேமதாஸவின் சார்பில் எதிரணி பாராளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மானே பேசி வருகிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது அருண ஜயசேகர கிழக்கு மாகாணத்தின் கட்டளைத் தளபதியாக இருந்தார் என்றும் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சாரா என்பவர் அங்கிருந்தே காணாமல் போயிருக்கிறார். அந்த வகையில் அருணவின் கீழிருந்தவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்றால் அவர் பாதுகாப்பு அமைச்சிலிருந்து நீக்கப்பட வேண்டும் எனவும் எதிரணி கூறுகிறது.

தேசிய மக்கள் சக்தியை எந்த அடிப்படையில் எதிர்ப்பது என்பதில் எதிரணியினர் எவரிடமும் எந்தவொரு திட்டமும் இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் எதிரணியினர் உயிர்த்த ஞாயிறு விடயத்தைக் காவ முற்படுகின்றனர். இதேபோன்று, இஸ்ரேல் எதிர்ப்பு பிரசாரங்களையும் முன்னெடுக்கின்றனர். ஆனால், பெரும்பான்மையான மக்கள் இதுபற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளவில்லை. இதன் காரணமாகவே ஒரு கட்டத்துக்கு மேல் எதிரணியினரால் எதனையும் முன்னெடுக்க முடியாமல் இருக்கிறது.

தேசிய மக்கள் சக்திக்கு பதிலாக ஒருவேளை ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இருந்திருந்தாலும்கூட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் எதனையும் செய்திருக்கப் போவதில்லை. ஆனால், இப்போது எதிரணியில் இருப்பதால் அரசாங்க எதிர்ப்புக்கு ஒரு சுலோகம் தேவைப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தற்கொலை குண்டுதாரிகளாக இருந்தவர்களை இயக்கிய பிரதான சூத்திரதாரி கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் பலரும் அந்த நபரை அறிந்திருக்கின்றனர். அவருடன் நிற்கும் புகைப்படங்களும் அப்போது வெளியாகியிருந்தன. ஆனால், இந்தக் கோணத்தில் இதுவரையில் விசாரணைகள் நடைபெறவில்லை. விசாரணை நடைபெறுவதோ முன்னைநாள் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண உறுப்பினரும் பின்னர் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டவருமான பிள்ளையானே தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகிறார். எனினும், இதுவரையில் குறித்த விசாரணைகளின் மூலம் அதிர்ச்சியான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. ஏற்கனவே மக்கள் மத்தியில் கதைகளாகப் பேசப்பட்ட விடயங்களே மீண்டும் கதைகளாக வருகின்றன. ஆனால், ஆதாரபூர்வமாக இதுவரையில் எந்தவொரு தகவலையும் அரசாங்கம் வெளியிடவில்லை. ஒரு சில தகவல்களையும் பாராளுமன்றத்தில் மட்டுமே தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நிலையில், இதற்கும் முஸ்லிம்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. மாறாக, இது அரசியல் தேவைக்காக சிலரால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட ஒரு சதி முயற்சி என்பதை எப்படியாவது நிரூபித்துவிட வேண்டும் என்பதில் மற்றவர்கள் எவரைவிடவும் முஸ்லிம் அரசியல்வாதிகளே தீவிரமாக இருக்கின்றனர். ஆனால், அமெரிக்க புலனாய்வு தகவல்கள் அனைத்தும் சூத்திரதாரிகள் யார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்ட பின்னரும்கூட உள்நாட்டு தொடர்புகளே பிரதானமானது என்பதாகவே விசாரணை நடைபெறுகிறது. இதற்கிடையே, கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் இது ஓர் உள்வீட்டு வேலை என்பதான கதையையே தொடர்ந்தும் கூறிவருகிறார். அமெரிக்காவின் புலனாய்வு தகவலை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மத குருக்கள் கூறுவதும் இலங்கையில்தான் நடந்து வருகிறது. இப்படியான அதிசயங்களின் மத்தியில் அரசாங்கத்தை எதிர்ப்பதற்கான ஒரு துருப்புச்சீட்டு என்னும் வகையில் இந்த விடயம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

# இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விசேட நடமாடும் சேவை ஆரம்பம்

வடமராட்சி, ஒக. 15

கிளீன் சிறீ லங்கா செயல் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், வட மாகாண சபை, யாழ்ப்பாண மாவட்ட செயலகம், பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் “இதய பூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு” - விசேட நடமாடும் சேவை ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சிறப்பு விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கௌரவ விருந்தினர்களாக ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் ந. சஞ்சீவன், கிளீன் ஸ்ரீலங்கா பணிப்பாளர்களான தசூன் உதார, . துலீப்



சேமரத்தன ஆகியோர் கலந்து கொண் டனர்.

இந் நிகழ்வில் வடக்கு மாகண சபை செயலாளர்கள், அதிகாரிகள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வந்த பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# 10 நாட்கள் நீர் கண்காட்சி நல்லூரில் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழா காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல ஆய்வுத் துறைகளின் கூட்டு முயற்சியாக வட மாகாண நீர் வளம் பேணுதற்கான பேராய்வு செயல் திட்டத்தின் 2ஆவது மாபெரும் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சமீபமாக அமைந்துள்ள நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளளது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் கண்காட்சியில் பல்வேறு ஆய்வுப் பெறுபேறுகள் உள்ளடங்கிய சீரமைக்கப்பட்ட காட்சிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இன்று இரவு-09 மணி வரையும், நாளை சனிக்கிழமை முதல் கண்காட்சி நிறைவுநாள் வரையான ஒன்பது நாட்களும் தினமும் காலை 09 மணி தொடக்கம் இரவு 09 மணி வரை மக்கள் கண்காட்சியைப் பார்வையிட முடியும். கண்காட்சியின் ஒரு கட்டமாக செயலமர்வுகளும், கலை ஆற்றுகைகளும் நடைபெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பளையில் வீடு ஒன்றின்மீது இனந்தெரியாத குழு தாக்குதல்

கிளிநொச்சி, ஒக. 15

கிளிநொச்சியில் வீடு ஒன்றுக்குள் நுழைந்த குழு ஒன்று வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களை அடித்து நொறுக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி - பளை - சோரன்பற்று பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


சம்பவம் குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு, பொன்னம்பலம் சுதாகரன் என்பவரின் வீட்டுக்குள் இரவு 8.30 மணியளவில் முகமூடியணிந்த சிலர் நுழைந்தனர். வாள்கள், கத்தி பெற்றோல் போத்தல்களுடன் 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில், வீட்டில் நின்றிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள், குளிர்சாதனப் பெட்டி, அலுமாரிகள் மற்றும் ஆவணங்கள் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் வீட்டின் கதவுகள் யன்னல்கள் என்பவை சேதமடைந்தன.

வீட்டில் இருந்தவர்கள் அபயக் குரல் எழுப்ப தொடங்கியதும் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் பெற்றோல் போத்தலையும் கைவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் .

**இடபம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். விவாதம் வரக்கூடும்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையைமாற்று வீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப் பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருட்சிகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**தனுசு**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

# மன்னார் காற்றாலை திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்ட ஒருமாத அவகாசம்

## ஜனாதிபதி வழங்கினார் - ஜெகதீஸ்வரன் எம். பி.

வவுனியா, ஒக. 15

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்ட ஒரு மாதகால அவகாசம் ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க - வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மற்றும் இல்மனைட் அகழ்வு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜெகதீஸ்வரன் எம். பி. மேலும் கூறுகையில்,

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தால் ஏற்படப் போகும் பாதிப்புகள் மற்றும் இல்மனைட் அகழ்வால் ஏற்படப்போகும் பாதிப்புகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர்.

இதன்போது ஜனாதிபதியால், காற்றாலை மூலம் பெறப்படுகின்ற மின்சாரத்தின் தேவை தொடர்பிலும் ஏனைய பொருட்களின் மூலமாக பெறப்படுகின்ற மின்சாரத்தால் ஏற்படுகின்ற செலவுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன. அத்துடன் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை நிறுவ வேண்டிய தேவை கட்டாயமாக இருக்கிறது எனவும் தெரிவித்திருந்தார். இல்லையேல் 2028 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு மின்சார நெருக்கடியை நாடு எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கூறினார்.

காற்றாலை திட்டத்தால் ஏற்படப் போகும் பாதிப்புகள் இருக்குமாயின் அது விஞ்ஞான ரீதியாக எவ்வாறான பாதிப்புகளாக அமையும் என்பது தொடர்பிலும் கரிசனையுடன் கேட்டறிந்தார். அத்துடன் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுமாக இருந்தால் அதனை எவ்வாறு நிவர்த்தித்து பாதிப்புகள் ஏற்படாத வகையில் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பது தொடர்பிலும் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்க வேண்டிய தேவை தொடர்பிலும் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதன் தேவை தொடர்பிலும் மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

அத்துடன் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற 70 மெஹா வோட்ஸ் மின்சாரத்துக்கு மேலதிகமாக காற்றாலைகள் மன்னார் தீவு பகுதிக்குள் அமைக்கப்படாது எனவும் மேலும் அமைக்கப்படவுள்ளதை தீவுப்பகுதிக்கு அப்பால் உள்ள பிரதேசங்களை அடையாளம் கண்டு அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார் என்று ஜெகதீஸ்வரன் எம். பி. கூறினார்.

(எ- 10)

# கடிதம் தந்தால் ஹர்த்தால் தொடர்பில் தீர்மானம் - வவுனியா வர்த்தக சங்கம்

வவுனியா, ஒக. 15

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் எழுத்து மூலமாக எமது சங்கத்துக்கு கடிதம் கிடைக்கும் பட்சத்தில் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என வவுனியா வர்த்தக சங்கத்தின் செயலாளர் ம. மயூரதன் தெரிவித்துள்ளார்

வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சுமந்திரன் சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு தொடர்பில் வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் கூறுகையில்,

ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்மை சந்தித்திருந்தார். எனினும், எழுத்து மூலமாக கடிதம் கிடைக்கும் பட்சத்தில் எமது சங்கத்தின் நிர்வாக சபை கூடி ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தாம் அவருக்கு தெரிவித்திருந்ததாக கூறினார்.

இந்த நிலையில் கடிதம் விரைவில் வழங்கப்படும் என சுமந்திரன் தமக்கு தெரிவித்ததாகவும் அவர் மயூரதன் கூறினார்.

(எ-10)

# வனவள திணைக்கள அதிகாரிகளால் ஓமந்தையில் பெரும் குழப்பநிலை!

## துப்பாக்கியை காட்டி மிரட்டியதாக குற்றச்சாட்டு

வவுனியா, ஒக. 15

வவுனியா, ஓமந்தை கொந்தக்காரன்குளம் பகுதியில் காணி ஒன்றில் அபிவிருத்திப் பணிகளை செய்து கொண்டிருந்தவர்களை வனவளத்திணைக்கள அதிகாரிகள் கைது செய்தமையால் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள காணி ஒன்றில் நேற்று முன்தினம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அந்தப் பகுதிக்கு சென்ற வனவளத்திணைக்கள அதிகாரிகள் இது வனவளத்திணைக்களத்துக்குச் சொந்தமான காணி எனத் தெரிவித்து அந்தப் பணிகளை தடுத்து நிறுத்தியதுடன் அதில் ஈடுபட்ட ஒருவரை தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றனர்.

குறித்த காணியின் உரிமையாளர் என தெரிவிக்கப்படும் நபர் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். அத்துடன் [illegible] வரை விடுவிக்குமாறும் கூறியிருந்தார். இதனால் அந்தப்பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது.

இதன்போது வனவளத்திணைக்கள அதிகாரி தனது கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டியதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த சம்பவத்தில் தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், குற்றவாளியை தப்பிக்க ஒத்துழைப்பு வழங்கியதாக தெரிவித்து வனவளத்திணைக்கள அதிகாரிகளால் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தை உட்பட பல்வேறு பகுதிகளில் மக்களின் பூர்வீகக் காணிகளில் வனவளத்திணைக்களம் எல்லைக்கற்களை போட்டுள்ளதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

(எ-10)

# காட்டு யானை தாக்கி இளைஞன் படுகாயம்

வவுனியா, ஒக. 15

வவுனியா, கனகராயன்குளம் - விஞ்ஞானகுளம் பிரதான வீதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கனகராயன்குளத்தில் உள்ள கடையில் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு விஞ்ஞானகுளத்தில் உள்ள தனது வீடு நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த தே. நிஷாந்தன் என்ற 32 வயது இளைஞனே கனகராயன்குளம் பாலத்துக்கு அருகில் பிரதான வீதியில் வைத்து யானையின் தாக்குதலுக்கு உள்ளானார்.

இதன்போது தலையில் காயமடைந்த அவர் மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த பகுதியில் வயோதிபர் ஒருவரும் யானை தாக்கி படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர போன்றே ஹரிணியும் எமக்கு மிகமுக்கியமானவர்!

## அமைச்சர் பிமல் திட்டவட்டம்



கொழும்பு, ஒக. 15

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க போன்றே பிரதமர் ஹரிணி அமரசூரியவும் எமக்கு மிக முக்கியமானவர். எம்மிடையே எவ்வித முரண்பாடும் கிடையாது. அரசாங்கமும் கவிழாது."இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பிரதமர் பதவியில் இருந்து ஹரிணி அமரசூரிய நீக்கப்பட்டு, அப்பதவிக்கு பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளார் என சமூகவலைத்தளங்களில் தகவல்கள் கசிந்துள்ள பின்னணியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தோல்விகளில் இருந்து மீண்டுவந்தவர்களே நாம். எனவே, எம்மிடையே எந்தவொரு விடயத்துக்காகவும் பிரச்சினை கிடையாது. ஜனாதிபதி அநுர போன்றே எமது அரசியல் இயக்கத்தில் உள்ள சிறந்த ஆளுமைமிக்கவர்தான் பிரதமர் ஹரிணி அமரசூரிய.

இந்நிலையில் எம்மிடையே பிளவு எனக்கூறி சஜித், நாமல் ஆகியோர் அழுது புலம்பி வருகின்றனர்.

அவர்கள் அணிக்குள் தான் பிளவு உள்ளது. ஐந்து வருடங்களுக்கு மக்களுக்குரிய சேவையை வழங்குவோம். இந்த ஆட்சி கவிழாது. ஐந்து வருடங்களுக்கு பிறகு மக்கள் ஆணையை பெற செல்வோம்.

நாம் எமது பிரதமரை பாதுகாப்போம். எமது அமைச்சர்களை பாதுகாப்போம். பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்துள்ளது.

அவர்களின் அரசியல் கேம் என்னவென்பது எமக்கு புரியும். எனவே, பிரதி அமைச் சரையும் நாம் பாதுகாப்போம்." - என பிமல் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஹேமந்த ரணசிங்கவுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, ஒக. 15

இலஞ்ச மற்றும் ஊழல் வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் சிறைச்சாலை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நயனஜித் ஹேமந்த ரணசிங்கவை அடுத்த மாதம் 19 ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்ற மஞ்சுள ரத்நாயக்க இந்த உத்தரவை பிறப்பித்தார். (அ)

# அனைத்து அருங்காட்சியகங்களும் திங்கட்கிழமைகளில் மூடப்படும்!

கொழும்பு, ஒக. 15

கொழும்பு தேசிய அருங்காட்சியகம் உட்பட அதன் கீழுள்ள அனைத்து அருங்காட்சியகங்களும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் மூடப்படுமென, தேசிய அருங்காட்சியக திணைக்களம் தெரிவித்துள்ளது.

பராமரிப்புப் பணிகளுக்காக அவை மூடப்படவுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், சுதந்திர தினம், தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு, தொழிலாளர் தினம் போன்ற விசேட விடுமுறை தினங்களில் அருங்காட்சியகங்கள் மூடப்படும்.

ஏனைய அனைத்து நாட்களிலும், காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை, அனைத்து அருங்காட்சியகங்களும் பொது மக்களின் பார்வைக்காக திறந்திருக்குமெனவும், தேசிய அருங்காட்சியக திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# அமைச்சரவையிலிருந்து அமைச்சர் வசந்த சமரசிங்கவை நீக்கவேண்டும்

## நவீன் திஸாநாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஒக. 15

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியதற்காக அமைச்சர் வசந்த சமரசிங்கவை அமைச்சரவையிலிருந்து நீக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தவிசாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

சுப்ரீம்செட் பற்றி பேசுவதன் மூலம் அமைச்சர் வசந்த சமரசிங்க, பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு சவால் விடுத்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொது வெளியில் விடயங்களைப் பேசுவதற்குப் பதிலாக, அரசாங்கத்துக்குள் விவாதித்து, பிரதமரின் கருத்துகள் குறித்து தனது ஆட்சேபனைகளை வெளிப்படுத் தியிருக்கவேண்டும்.

இன்று அமைச்சர்கள் நடந்துகொள்வது போல், அமைச்சரவை ஒருபோதும் செயல்பட்டதில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு அமைச்சரவை அமைச்சர் பிரதமருக்கு சவால் விடுவது இதுவே முதல் முறை.

1980 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமைகளை ரத்து செய்யும் ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தின் நடவடிக்கையை, எனது தந்தை, முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க மற்றும் முன்னாள் அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் ஆகியோர் எதிர்த்தனர்.

அமைச்சரவைக்குள் இந்த நடவடிக்கைக்கு, அவர்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். (அ)

# ஆசாத் மௌலானாவை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக. 15

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்த சனல் 4 ஆவணப்படத்தில் இடம்பெற்ற முக்கிய நபரான ஆசாத் மௌலானாவை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு பேட்டியளித்த அவர்-இதுபோன்ற ஒரு முக்கிய மான கட்டத்தில், எதிர்க்கட் சிகள் பாதுகாப்பு பிரதி அமைச் சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக பாராளுமன்ற சபாநா யகரிடம் நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பித்திருப்பதை விமர்சித்தார்.

"ஆசாத் மௌலானாவை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நாங்கள் அதிகாரபூர்வ வழிகள் மூலம் பணியாற்றி வரும் நிலையில், இந்த சிறிய குழு சென்று அருண ஜயசே கரவுக்கு எதிராக நம்பிக்கை யில்லா தீர்மானத்தை தாக்கல் செய்கிறது. சபாநாயகர் உத்தரவு பிறப்பித்தவுடன், அதை நாங்கள் பகிரங்கப்படுத்து வோம் - அதில் எந்தப் பிரச் னையும் இல்லை. ஆனால் நான் சொல்ல வேண்டும், அரசியலை இவ்வளவு கீழ் மட்டத்துக்கு இழுக்கக்கூடாது. நேர்மையா கச் சொன்னால், எதிர்க்கட்சி இன்னும் இவ்வளவு குறுகிய மனப்பான்மையுடன் செயல்ப டுவதால் நாங்கள் கலக்கமடை கிறோம், "என்று அமைச் சர் ரத்நாயக்க மேலும் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் போதும் அதற்குப் பின்னரும் ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் அப்போது அருண ஜயசேகர மீது எந்த விசாரணையும் நடத்தவில்லை என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

"கடந்த 06 ஆண்டுகளில், அருண ஜயசேகர மீது எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. இது இரண்டு அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்தில். நாங்கள் ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகரவை மீண்டும் பணியில் அமர்த்திய பிறகு, அசாத் மௌலானாவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிறகு, எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பிக்கிறது," என்று அவர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு அருண ஜயசேகரவுக்கு எதிராக விசாரணை நடத்தத் தவறியதற்காக சஜித் பிரேமதாஸ மற்றும் ரணில் விக்கிரமசிங்க மீது இப்போது விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அமைச்சர் ரத்நாயக்க கூறினார். (அ)

# கஞ்சா பயிர்ச்செய்கையை அனுமதிப்பது நாட்டை பின்னோக்கி கொண்டு செல்லும்!

## போதைப்பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 15

கஞ்சா பயிர்ச்செய்கை சட்டரீதியாக்கப்படுவது, பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் நாட்டை பின்னோக்கி கொண்டு செல்லும் ஒரு திட்டமாகும் என மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

கஞ்சா பயிர்ச்செய்கைக்கு ஏழு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

முதலீட்டுச் சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் ஒரு திட்டமாக கஞ்சா பயிர்ச்செய்கைக்கான அனுமதி 7 வெளிநாட்டு முதலீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதன் நோக்கம், பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் பயிர்ச்செய்கையின் அனைத்து பகுதிகளையும் ஏற்றுமதிக்கு மட்டுமே பயன்படுத்துவதும், நாட்டிற்கு பொருளாதார நன்மைகளைப் பெறுவதும் என்பதை அவர் மேலும் தெரிவித்திருந்தார்.இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் மேலும் தெரிவிக்கையில்-கடந்த காலங்களில், இந்த முடிவை இலங்கையில் செயற்படுத்த எத்தனித்திருந்தனர்.

எனினும், இலங்கை மருத்துவ சங்கம், இலங்கை மனநல மருத்துவர்கள் சங்கம், சமூக மருத்துவர்கள் சங்கம் மற்றும் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் சமூகங்களின் செல்வாக்கு காரணமாக முயற்சிகள் முறியடிக்கப்பட்டமையானது அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திட்டத்தை செயல்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாகவுள்ளது.

இந்த திட்டத்தை ஏற்கனவே ஆட்சியில் இருந்த அரசாங்கம் இத்திட்டத்தை அமுல்படுத்த முயன்றபோது தற்போதைய தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர், அதனைக் கேலி செய்து எதிர்ப்பை தெரிவித்திருந்தமை அவரது சமூக ஊடக கணக்குகளில் காணப்பட்டது.

அது போன்ற சிறந்த நிலையில் இருந்த ஒருவர், தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சரான பின்னர், இந்த திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதானது வருந்தத்தக்கது.

கஞ்சாவை சட்டப்பூர்வ பொருளாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும் காணப்பட்டாலும், உலகளாவிய ரீதியில் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குவதற்கான முயற்சியானது, பொதுமக்களின் எதிர்ப்பு மற்றும் அறிஞர்களின் எதிர்ப்பால் தோல்வியடைந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

எனவே, இது கஞ்சா வியாபாரத்தின் இறுதி இலக்கை அடையப் பயன்படுத்தப்படும் ஒரு மூலோபாயத் திட்டமாகும். புதிய அரசாங்கம் அந்த திட்டத்தின் ஒரு தரப்பாக மாறியுள்ளது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.சர்வதேச சந்தையில் கஞ்சா அதிகமாக காணப்படுகின்றது, எனினும் சர்வதேச ரீதியாக தேவை அதிகரிக்கவில்லை, சந்தையின் இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச ரீதியாக கஞ்சா சந்தை தற்போது வளர்ச்சியை நோக்கிச் செல்ல முடியாது.

பொருளாதார நன்மைகள் என்று கூறும் தவறான அறிக்கைகளின் அடிப்படையில் இது போன்ற முடிவுகளை எடுப்பதன் மூலம் எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள்மேலும்அதிகரித்து பல பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை மிகுந்த வருத்தத்துடன் கூற வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் அத்தகைய முடிவை எட்டி யுள்ளது ஆச்சரியமாகவும், சந்தேகமாகவும் உள்ளது.கஞ்சா பயிர்ச் செய்கை சட்ட ரீதியாக்கப்படின், இந்த முடிவு எதிர்காலத்தில் நமது நாட்டின் சுகாதாரம், சமூகம், பொருளா தாரம் மற்றும் பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்ப டுத்தக்கூடிய மற்றும் நாட்டை பின்னோக்கிக் கொண்டு செல் லும் ஒரு திட்டமாகும் என்பதை இறுதியாக நாம் வலியுறுத்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு எதிரணிகள் இணையவேண்டும்

## மொட்டு கட்சி அழைப்பு

கொழும்பு, ஓக. 15

**தாய்நாட்டை பாதுகாக்க எதிரணிகள் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க கூறியவை வருமாறு-

நாட்டு மக்களுக்கு தலைமைத்துவம் அவசியம். எனவே, நாம் கூட்டு எதிரணியாக செயற்படுவோம். முதலில் ஒன்றிணைவோம். அதன்பின்னர் பயணத்தை தீர்மானிக்கலாம்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகப்போகின்றது. ஆனால் ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால் கடிதமொன்றை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் பிரதிநிதி இல்லை. ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க முடியவில்லை.

பதவியைவிட தாய்நாடு தான் முக்கியம் என்பதை உணர்ந்து அரசாங்க ஊழியர்களும், படை அதிகாரிகளும் செயற்பட வேண்டும்-என்றார்.

# நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் பாராளுமன்றில் திருத்த வேலைகள்

கொழும்பு, ஓக. 15

பாராளுமன்றத்தில் பாரிய அளவிலான திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையின் அனுமதிக்கு அமைய 42 வருடங்களுக்குப் பின்னர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவின் அறிவுறுத்தலுக்கு அமைய பாராளுமன்றத்தில் பாரிய அளவிலான திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, பாராளுமன்ற கட்டடத்தொகுதியின் கொங்கிரீட் மேல்தளம் மீது காணப்படும் மண் அகற்றப்பட்டு திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அது மாத்திரமன்றி, கூரைகளின் பீலிகள் ,செப்புக் கதவு, பாராளுமன்ற மருத்துவ நிலையம், கழிவறைக் கட்டமைப்பு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அணி அறை என்பவற்றிலும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறு அளவிலான திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக்கள் இணைப்புப் பொறியியல் திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தாலும், பாரிய அளவிலான திருத்த வேலைகள் இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

# அரசு இருட்டடிப்பு செய்பவற்றை வெளிப்படுத்துவது எம் பொறுப்பு!

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 15

அரசாங்கத்தால் இருட்டடிப்பு செய்யப்படும் விடயங்களை மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. அந்தவகையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் முடிவு எடுக்கப்பட்டது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. ஜே.வி.பியின் தேசியப் பட்டியலில் இருந்த நபர் செலவளித்துள்ளார். அவரின் மகன்மார் தற்கொலை குண்டு தாரிகளாக மாறினர். புலனாய்வு தகவல் கிடைத்தும் உரிய நட வடிக்கை எடுக்காத தரப்பினருக்கு இன்று அரசியல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டும் பொறுப்பு எமக்குள்ளது. எதிரணியாக உள்ளாட்சி சபைகளில் இணைந்து செயற்படுகின்றோம். அந்த வகையில் விடயங்களை சுட்டிக்காட்டும் வகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றோம்-என்றார். (அ)

# உலக வர்த்தக அமைப்பின் மீன்பிடி மானிய உடன்படிக்கையில் இணைந்தது இலங்கை!

கொழும்பு, ஓக. 15

நிலைபேறான மீன்பிடித் தொழிலுக்கான இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில், உலக வர்த்தக அமைப்பின் மீன்பிடி மானிய உடன்படிக்கையில் இலங்கை உத்தியோகபூர்வமாக இணைந்தது.

இதன்படி, இலங்கையின் உலக வர்த்தக அமைப்பின் தூதுவர் ஆர். ஜி. எஸ். விஜேசேகர, இதற்கான அங்கீகார பத்திரத்தை அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

பல வருடங்களாக விவாதிக்கப்பட்டு வந்த இந்த உடன்படிக்கை மூலம், சட்டவிரோத, அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் மற்றும் அதிகப்படியான மீன்பிடி இருப்புக்களுக்கு வழங்கப்படும் மானியங்களை தடைசெய்யப்படும்.



இது தொடர்பில் கருத்து தெரிவித்த, மேலதிக செயலாளர் (மீன்வள வள முகாமைத்துவம்) தம்மிக ரணதுங்க-

இந்த உடன்படிக்கை இலங்கையின் மீன்பிடித் துறைக்கு பல விசேட நன்மைகளைத் தரும்.

நிலைபேறான மீன்பிடித் தொழிலை முன்னெடுக்கும் நாடாக சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயர் மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிக்கும். இது நமது மீன் உற்பத்திப் பொருட்களுக்கு அதிக மதிப்புள்ள ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகளை உருவாக்கும். மேலும், உலக வர்த்தக அமைப்பின் விசேட மீன்பிடி நிதியத்தின் ஊடாக நமது மீனவ சமூகத்தின் திறன்களை மேம்படுத்தவும், தொழில்நுட்ப உதவிகளைப் பெறவும் வாய்ப்பு கிடைக்கும்-என்றார். (அ)

# காணாமற்போனவர்கள் குறித்து புதிய முறைப்பாடுகள் இல்லை!

கொழும்பு, ஓக. 15

கடந்த ஆண்டில் காணாமற்போனவர்கள் அல்லது வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக எந்தவொரு புதிய முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரச அதிகாரிகள் அல்லது ஏனைய தரப்பினரால் எந்தவொரு முறைப்பாடுகளும் அளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அரசாங்கத்தை விமர்சிக்கும் நபர்களைக் கைது செய்ய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2024 மனித உரிமைகள் ஆண்டு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய, 1983-2009 உள்நாட்டுப் போர் மற்றும் 1988-89 கிளர்ச்சியிலிருந்து உருவான மனித உரிமை மீறல்களை விசாரிப்பதில் சிறிய முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் மனித உரிமைகளை மீறிய அதிகாரிகளை அடையாளம் கண்டு தண்டனை வழங்குவதில் அரசாங்கம் குறைந்தபட்ச நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகே கைதானார்

கொழும்பு, ஓக. 15

பொலிஸ் கலாசார பிரிவின் பதில் பணிப்பாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஸ் கமகே நேற்று கைது செய்யப்பட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு அதிகாரிகளினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிரான பல்வேறு இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கொத்து ரொட்டி, முட்டை அப்பம் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 15

முட்டை மற்றும் பிற மூலப் பொருட்களின் விலை குறைந்திருந்தாலும், கொத்து ரொட்டி, முட்டை அப்பம் மற்றும் முட்டை சார்ந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகளும் மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக, நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனிடையே, ஒரு முட்டையின் விலை ரூபாய் 29 ரூபாய் முதல் 33 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த நிலையில், பல்வேறு உணவகங்களில் கொத்து ரொட்டியின் விலை மிக அதிகமாக இருப்பதாகவும், முட்டை அப்பம் மற்றும் முட்டை ரொட்டியின் விலை சமமாகவும் அதிகமாகவும் இருப்பதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, உடனடியாக நுகர்வோர் அதிகார சபை தலையிட்டு மக்களுக்கு சலுகைத் திட்டங்களை வகுக்க வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நிரந்தரப் பணிப்பாளர்கள் இல்லாத மூன்று முக்கிய வைத்தியசாலைகள்

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் உள்ள மூன்று முக்கிய தேசிய மருத்துவமனைகள் ஆறு மாதங்களுக்கும் மேலாக நிரந்தர பணிப்பாளர்கள் இல்லாமல் இயங்கி வருவதாக சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை மற்றும் காலி கராப்பிட்டிய தேசிய மருத்துவமனை ஆகியவற்றிலேயே இந்த வெற்றிடங்கள் உள்ளன.

தற்போது, கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனையை லேடி ரிட்ஜ்வே குழந்தைகளுக்கான மருத்துவமனையின் பணிப்பாளராக இருக்கும் டாக்டர் பிரதீப் விஜேசிங்க மேற்பார்வையிட்டு வருகிறார். டாக்டர் விஜேசிங்க இரு நிறுவ னங்களையும் ஒரே நேரத்தில் நிர்வகித்து வருகிறார்.

பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்கான நேர்காணல்கள் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும், சீரான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக மருத்துவமனை பணிப்பாளர்களுக்கான காலியிடங்கள் மிக முன்னதாகவே நிரப்பப்பட்டிருக்கவேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# ரூ.40 மில்லியன் பெறுமதியுடைய குஷ் போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, ஓக. 15

தாய்லாந்தில் இருந்து குளிரூட்டி சாதனத்துக்குள் மறைத்து வைத்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் கைப்பற்றியுள்ளது.

பேலியகொடை, நுகே வீதியில் உள்ள துறைமுக கொள்கலன் முற்றத்தில் உள்ள ஒரு கொள்கலனில் 6 கிலோகிராம் குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாக மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவன்ச தெரிவித்தார்.

இந்த குஷ் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷர்களுடன் அரசுக்கு ஒப்பந்தம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 15

**ராஜபக்ஷர்கள் தவறானவர்கள் அல்லர் என்று மக்களுக்கு கூறுவதைப் போன்ற செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இது ஜே.வி.பிக்கும் ராஜபக்ஷர்களுக்குமிடையிலான அரசியல் ஒப்பந்தமாகும். இந்த கூட்டணியை தோற்கடிப்பதற்கான அரசியல் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் ஆரம்பிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.**

களுத்துறை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-ராஜபக்ஷர்கள் நாட்டை வங்குரோத்தடையச் செய்வதற்காக முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் தவறானவையல்ல என மக்களுக்கு கூறும் செயற்பாடுகளையே தற்போதைய ஜே.வி.பி. அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

இது ஜே.வி.பிக்கும் ராஜபக்ஷர்களுக்குமிடையிலான அரசியல் ஒப்பந்தமாகும். ராஜபக்ஷர்களும் அநுரகுமார திஸாநாயக்க தரப்பினரும் இணைந்துதான் நாட்டில் இன்று இந்த நிலைமையை உருவாக்கியிருக்கின்றனர்.

செய்மதி விவகாரத்தில் ஜே.வி.பியின் செயற்பாடு இதனை தெளிவாகக் காண்பிக்கிறது. உகண்டாவில் பணம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினர். ஆனால் இன்று வரை அதனை மீளப் பெறுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அது குறித்து அரசாங்கத்தில் எவரும் வாய் திறப்பதும் இல்லை. இவற்றைக் கூறி மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற் றிவிட்டு, தற்போது ராஜபக்ஷர்கள் கள்வர்கள் அல்லர் என்கின் றனர்.

கடந்த ஆட்சியில் ராஜபக்ஷர்களும், ரணில் விக்கிரமசிங்கவும் நண்பர்கள் என்பதைப் பார்த்தோம். இப்போது அவர்களுடன் அநுரகுமார திஸாநாயக்க தரப்பும் இணைந்துள்ளது என்ற யதார்த்தத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் குழுவை தோற்கடிக்கச் செய்வதற்கான அரசியல் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் ஆரம்பிக்கும் என்பதை நினைவுபடுத்துகின்றோம். ஜே.வி.பி. ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தியே பிரதான காரணம்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் உரித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய வசமே காணப்படுகிறது. எனவே தான் ஹரிணியை ஓரங்கட்ட வேண்டிய தேவை ஜே.வி.பி க்கு காணப்படுகிறது.

வசந்த சமரசிங்கவுக்கும், பிரதமருக்கும் முரண்பாடு இருப்பது பொய் அல்ல. அரசாங்கம் அதை மறைக்க முயற்சிக்கிறது. பிரதமர் ஹரிணி இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜே.வி.பி. , தேசிய மக்கள் சக்தி இணைந்து பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் பொய் கூறிக் கொண்டிருக்கிறது. இதுவே உண்மையாகும்- என்றார். (அ)

# ஜப்பானில் வேலை தருவதாக பெருந்தொகை பணம் மோசடி

## தப்பியோடிய பெண்

கொழும்பு, ஓக. 15

ஜப்பானில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, பணம் மோசடி செய்த கல்கிஸைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரின் கூற்றுப்படி, இரண்டு வருட வேலை விஸா வாங்கித் தருவதாகக் கூறி, பாதிக் கப்பட்டவர்களிடமிருந்து குறித்தப் பெண் பெரும் தொகையை மோசடி செய்துள்ளதாக கூறப்படுகிறது.

கம்பளையில் வசிக்கும் ஒருவர், நவம்பர் 14, 2023 அன்று, சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு 500,000 ரூபாயை முதற்கட்டமாக செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

எனினும், அந்தப் பெண் பணத்தைத் திருப்பித் தரவில்லை எனவும் ஜப்பானில் வேலைவாய்ப்பை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கூறி அவருக்கு எதிராக கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற முறையில் பலர் ஏமாற்றப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது, மேலும் சந்தேக நபர் பின்னர் அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கைவிடப்பட்டிருந்த மீனவர் ஓய்வூதிய திட்டம் மீண்டும்!

கொழும்பு, ஓக. 15

கைவிடப்பட்டிருந்த மீனவர் ஓய்வூதிய திட்டம் அடுத்த மாதத்தின் முதல் வாரத்திற்குள் மீள ஆரம்பிக்கப்படுமென கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

தகுதியானவர்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்கஆரச்சி குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தை விவசாய அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியன இணைந்து மீள ஆரம்பித்துள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# கண்டியை இரவிலும் செயற்படும் நகரமாக மாற்றுவதற்கு முயற்சி!

கொழும்பு, ஓக. 15

கண்டி நகரத்தை 24 மணி நேரமும் செயற்படும், சுற்றுலா நகரமாக மாற்றும் நோக்கில் நாளையும் நாளை மறுதினமும் சிறப்புத் திட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், கண்டி நகரின் முக்கிய ஹோட்டல்கள், உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றம் கலாசார மையங்களில் இசை நிகழ்ச்சிகள், கலைக் கண்காட்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக, இரவு நேரத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய வகையில் இரவுச் சந்தைகள், தெரு உணவு விழாக்கள், பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கண்டி நகரின் பண்பாடு மற்றும் வரலாற்று சிறப்புகளை அனுபவிக்க வாய்ப்பளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சி, கண்டியின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதோடு, உள்ளூர் வணிக மற்றும் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹங்வெல்லவில் துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்!

கொழும்பு, ஓக. 15

ஹங்வெல்ல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். ஹங்வெல்ல பகத்கம பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் அங்குள்ள வீடொன்றுக்குள் நுழைந்து இளைஞர் ஒருவரை தேடியுள்ளதாகவும் அங்கு அவர் இல்லாததையடுத்து குறித்த இளைஞனின் தந்தை மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எப்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபரின் தந்தையின் காலில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் சிகிச்சைகளுக்காக அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டுபாயில் தலைமறைவாக உள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரரான லலித் கன்னங்கரவின் நெருங்கிய உதவியாளராக செயற்பட்ட நபர் ஒருவரின் தந்தையே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மீகொட மகவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகொட, மகவத்த முது ஹேனவத்த பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடாத் தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடமைகளை நேற்று பொறுப்பேற்ற புதிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த!

கொழும்பு, ஓக. 15

புதிய பொலிஸ்மா அதிபராக, சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நேற்றுக் காலை கடமைகளை பொறுப்பேற்றார்.

பொலிஸ் தலைமையகத்தில் வைத்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட பிரியந்த வீரசூரிய, தனது கடமைகளின்போது பொலிஸ் துறையின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பாதுகாக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யப் போவதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன் பொலிஸ் துறையின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க தாம் பணியாற்றி வருவதாகவும், இதற்காக அனைத்து பொலிஸ் அதிகாரிகளிடமிருந்தும் உயர் செயல்திறனை எதிர்பார்ப்பதாகவும், புதிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

மேலும் ஒழுக்கமான பொலிஸ் துறையை நிறுவுவதே தனது ஒரே நோக்கம் என்றும், அதனை மிக உயர்ந்த இடத்தில் வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். (அ)

# வெலிக்கடை சிறைச்சாலையில் சிறப்பு சுகாதார மருத்துவ திட்டம்



கொழும்பு, ஓக. 15

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கான சுகாதாரப் பராமரிப்பு என்பது அவர்களுக்கான தனி மனித உரிமை என சுகாதரா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக் காட்டியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைகளை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டுள்ள சிறப்பு சுகாதார மருத்துவத் திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் நிறுவப்பட்ட 24 சிறை மருத்துவமனைகளில், சிறைஅதிகாரிகள், கைதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக சிறப்பு மருத்துவ முகாம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சுகாதார அமைச்சர் அதில் கலந்து கொண்டார்.

இந்த மருத்துவ முகாம், வெலிக்கடை சிறைச்சாலை மற்றும் சீர்திருத்த பயிற்சி மைய வளாகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இது குறித்து சுகாதரா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்துத் தெரிவிக்கையில்-

சிறைச்சாலை மருத்துவமனைகளில் அவசர சிகிச்சை பிரிவுகளை நிறுவுவதன் மூலம் மனித மற்றும் பௌதீக வளங்களை பாதுகாக்க முடியும் சிறைச்சாலைகளில் தொற்றா நோய்கள் அதிகரிப்பதற்கு மன அழுத்தமும் ஒரு காரணமாகவுள்ளது.

நாட்டில் கைதிகளுக்கான சுகாதாரப் பராமரிப்பு என்பது ஒரு சலுகை அல்ல, மாறாக ஒரு உரிமையாகும். பணி நெருக்கடி மற்றும் போதுமான ஊழியர்கள் இல்லாமை போன்ற மன அழுத்தம் நிறைந்த சுற்றுச்சூழல் நிலைமைகளும் சிறைச்சாலைகளில் தொற்றா நோய்கள் அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளன.

சிறைச்சாலை மருத்துவமனைகளில் மருத்துவர்கள் உட்பட தேவையான சுகாதார ஊழியர்கள் விரைவில் அவசர சிகிச்சை பிரிவுகளை நிறுவ இணைக்கப்படுவார்கள். சிறைச்சாலை மருத்துவமனைகளில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை மருத்துவமனைகளின் மகளிர் விடுதிகளில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க அவசர நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயல்களை முற்றாக ஒழிக்க தீர்மானம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

மட்டக்களப்பு, ஓக. 15

**கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை உள்ளிட்ட சட்டவிரோத செயல்களை முற்றாக ஒழிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பழைய கச்சேரி மண்டபத்தில் அபிவிருத்திக் குழுத் தலைவரும் அமைச்சருமான சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சர் ஆனந்த விஜயபால ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் மதுபான விற்பனையைத் தடுக்க, விசேட அதிரடிப்படையுடன் இணைந்து பொலிஸார் ஒவ்வொரு பொலிஸ் நிலையப் பிரிவிலும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு, இத்தகைய சட்டவிரோத செயல்களை முற்றாக ஒழிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர்கள் நீண்ட கலந்துரையாடலை நடத்தி தமது கவலைகளை முன்வைத்தனர். இதற்கமைய புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படும் உரிமம் தொடர்பான விவரங்களை பொலிஸார், பிரதேச செயலாளர் அல்லது பிரதேச சபையினர் கோரும் பட்சத்தில் உடனடியாக வழங்க வேண்டும்.

இதுவரை வழங்கப்பட்ட மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான விவரங்கள் உடனடியாக அரசாங்க அதிபருக்கும் அபிவிருத்திக் குழுத் தலைவருக்கும் வழங்கப்பட வேண்டும். சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடும் வாகனங்களை நிறுத்தி, தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது"- என்றார்.

இந்தக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் ஜே. ஜே. முரளிதரன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறீநேசன், சிறிநாத், இரா. சாணக்கியன், எம். ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் வர்ண ஜெயசுந்தர, பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர். (எ)

# கனகர் கிராம மக்களுக்கு விதை கச்சான் வழங்கல்



பொத்துவில், ஓக. 15

சமகால பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்ட பொத்துவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கனகர் குடியேற்றக் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒரு தொகுதி விதை கச்சான் பொதிகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பால் நேற்று வியாழக்கிழமை குறித்த வலையமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் இந்த நிகழ்வு கனகர் கிராமத்தில் நடைபெற்றது.

மீள்குடியேறிய - தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகளுக்கு ஒரு குடும்பத்துக்கு 50 கிலோ கச்சான் விதைப் பொதிகள் வீதம் வழங்கப்பட்டன.

# சமஷ்டி தீர்வு வழங்க கோரி பொத்துவிலில் போராட்டம்



பொத்துவில், ஓக. 15

சமஷ்டி தீர்வு வழங்கக்கோரி பொத்துவிலில் நேற்று அமைதி வழிப்போராட்டம்நடைபெற்றது.

நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாட்கள் செயல்முனையின் 3 ஆவது வருட பூர்த்தியையொட்டி இந்த போராட்டம் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் கலைவாணி தயாபரன் தலைமையில் பொத்துவில் கனகர் கிராமப் பகுதியில் நடைபெற்ற 14 ஆவது நாள் போராட்டத்தில் பலர் பங்கேற்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான தீர்வுத் திட் டத்தை வலியுறுத்தக் கோரி இந்தப் போராட்டம் நடை பெற்றது.

மகளிர் அமைப்பினர் மற்றும் பொத்துவில் கனகர் குடியேற்ற பொதுமக்களும் இதில் கலந்து கொண்டனர். (எ-06)

# கடையடைப்பு போராட்டத்துக்கு மு. காவும் ஆதரவு தரவேண்டும்

## தமிழ் அரசுக் கட்சி கோரிக்கை

காரைதீவு, ஓக. 15

நீதி கோரிய கடையடைப்பு போராட்டத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைக்க அரசியல் செய்யும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு தர வேண்டும் என்று காரைதீவு பிரதேச சபை அமர்வில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபையின் அமர்வு தவிசாளர் சு. பாஸ்கரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த அமர்வின்போது, முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட நிலையில் முத்துஐயன் கட்டு குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் கபில்ராஜூக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, பிரதேச சபையின் நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள தொகையில் 80 சதவீதம் மாத்திரமே மீள் நிரப்பல் மூலம் அரசினால் வழங்கப்படுகின்றது. மிகுதியான 20 சதவீத தொகையானது சபை நிதி மூலம் வழங்கப்பட்டு வருவதால் மக்களுக்கான அபிவிருத்தி வேலைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அரசினால் வழங்கப்படும் மீள் நிரப்பல் தொகையை 100 சதவீதமாக வழங்குவதற்கு அரசாங்கத்தை கோருவதற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு சபை அனுமதி வழங்கியது.

மேலும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக தொலைபேசி பாவனைக்கு மாதாந்தம் தவிசாளர் (2500ஃ-), உபதவிசாளர்(1500ஃ-), உறுப்பினர்களுக்கு மாதாந்தம் (1000ஃ-), எனும் அடிப்படையில் வழங்க சபை அனுமதி வழங்கியதுடன் பிரதேச சபையின் வாகனத்தை தவிசாளர் அலுவலக நோக்கத்துக்கு பயன்படுத்தும் போது மாதமொன்றுக்கு பயன்படுத்தும் எரிபொருள் அளவை (லீற்றரில்) தீர்மானித்து சபை அனுமதி வழங்கியது.

இதன்போது முன்னாள் தவிசாளரும் பிரதேச சபை உறுப்பினருமான கி. ஜெயசிறில், கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற அநியாயங்கள் தொடர்பில் சபையில் விசேட உரையாற்றி எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு மலையகத் தலைவர்கள் ஆதரவு தந்தது போன்று எங்களுடன் இணைக்க அரசியல் செய்யும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ஏனைய அரசியல் கட்சிகளும் ஆதரவு தருமாறு கோரிக்கை விடுத்தார். (எ-06)

# "பிரச்னைகளுக்கு காலம் தாழ்த்தாது உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்"

காரைதீவு, ஓக. 15

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு காலம் தாழ்த்தாது உடனடித் தீர்வு வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆலையடிவேம்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆதம்பாவா எம்.பி. பணிப்புரை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் பிரதேச செயலாளர் திரவியராஜின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், ஆலையடி பிரதேச சபை தவிசாளர் ஏ. தர்மதாஸ், உதவி பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொது அமைப்புகளின் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? என்று இதன்போது ஆராயப்பட்டது.

மேலும் பிரதேச செயலக பிரிவிலுள்ள குடிநீர் பிரச்னை, வீதிப் புனரமைப்பு, யானை வேலி அமைப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன் விரைவில் இதற்கான தீர்வுகள் மக்களுக்கு சென்றடைய உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரையும் வழங்கப்பட்டது. (எ-06)

# ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது

மட்டக்களப்பு, ஓக. 15

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் அமைச்சருமான சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நடைபெற்றது.

இதில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவும் பங்குபற்றினார்.

கூட்டம் ஆரம்பிக்கயிருந்த நிலையில் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டதுடன் கூட்டம் நிறைவடைந்த பின்னர் ஊடக சந்திப்பு நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் தொடர்பான விடயங்கள் தொடர்பில் பேசப்படவுள்ளதன் காரணமாக ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லையென தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேரழிவு நிகழப்போகிறது

# காஸாவை கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டத்துக்கு பிரான்ஸ் கடும் எதிர்ப்பு

பாரிஸ், ஓக. 15

**காஸாவை கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டம் என்பது நடக்கவிருக்கும் ஒரு பேரழிவாகும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் எச்சரித்துள்ளார். இது முடிவில்லாத போரை நோக்கி நகர்த்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**



இராணுவ நடவடிக்கை மூலம் காஸா நகரை கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டத்துக்கு அதன் பாதுகாப்பு அமைச்சரவை கடந்த வாரம் ஒப்புதல் அளித்தது. ஏற்கனவே காஸா பகுதியில் சிக்கி உள்ள அப்பாவி மக்கள் உணவுப் பஞ்சத்தாலும் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலாலும் கடும் பேரழிவை சந்தித்து வருகிறார்கள். இந்த நிலையில், காஸாவின் முக்கிய பகுதியான காஸா சிற்றியை கைப்பற்ற இஸ்ரேல் திட்டமிட்டிருப்பது சர்வதேச அளவில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், "இஸ்ரேலின் புதிய திட்டம் முன்னெப்போதும் இல்லாத பேரழிவுக்கும் நிரந்தர போருக்கும் வழி வகுக்கும். இதனால் பெரிதும் பாதிக்கப்படப்போவது, இஸ்ரேலிய பணயக்கைதிகளும் காஸா மக்களும்தான்.

காஸாவை பாதுகாப்பதற்கான திட்டத்தை ஐ.நா. முன்னெடுக்க வேண்டும். இதற்கான அமைப்பை காஸாவில் நிறுவ வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு சபையில் இதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும். இது தொடர்பில் மற்ற உறுப்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எனது குழுக்களை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்"- என்று குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியாவிடம் பிரம்மோஸ் உள்ளது

# பாக். பிரதமரின் மிரட்டலுக்கு அசாதுதீன் எம்.பி. பதிலடி

புதுடில்லி, ஓக. 15

இந்தியாவிடம் பிரம்மோஸ் உள்ளது என்று பாகிஸ்தான் பிரதமரின் மிரட்டலுக்கு இந்திய பாராளுமன்ற உறுப்பினர் அசாதுதீன் ஓவைஸி பதிலளித்துள்ளார்.

காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதால் பாகிஸ்தானுக்கு தண்ணீர் வழங்கும் சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், "பாகிஸ்தானுக்கு வரவேண்டிய ஒரு சொட்டு நீரைக்கூட இந்தியா நிறுத்தி வைக்க முடியாது. தண்ணீரை நிறுத்த முயற்சித்தால், மறக்க முடியாத வகையில் பாகிஸ்தான் பாடம் கற்பிக்கும். சர்வதேச ஒப்பந்தங்களின் கீழ் வரும் தனது உரிமைகளில் பாகிஸ்தான் சமரசம் செய்து கொள்ளாது"- என்றார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிம் முனீர் சமீபத்தில், அணு ஆயுத தாக்குதல் அச்சுறுத்தல் விடுத்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பும் மிரட்டல் விடுக்கும் வகையில் பேசியுள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த ஹைதராபாத் எம்.பி. ஓவைஸி கூறியதாவது: ஒரு நாட்டின் பிரதமராக இருக்கும் ஷெபாஸ் ஷெரீப் இது போல் முறையற்ற வகையில் பேசக்கூடாது. இதுபோன்ற பேச்சுக்கள் எல்லாம் இந்தியாவை பாதிக்காது.

இந்தியாவிடம் பிரம்மோஸ் என்ற தொலைதூர சுப்பர் சொனிக் ஏவுகணை உள்ளது என்பதை பாகிஸ்தான் நினைவில் கொள்ள வேண்டும்- என்றார். (எ)

# சீனா மீதான வரி விதிப்பு மேலும் 90 நாட்களுக்கு நிறுத்திவைப்பு

வாஷிங்டன், ஓக. 15

சீனப் பொருட்கள் மீதான வரி விதிப்பை மேலும் 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்தியா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு பரஸ்பர வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார். சீனப் பொருட்களுக்கு அமெரிக்கா 30 சதவீதம் வரி விதித்த நிலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சீனாவும் வரியை உயர்த்தியது.

இதையடுத்து சீனாவுக்கு 145 சதவீதம் வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் அறிவித்தார். இதனால் இரு நாடுகள் இடையே வர்த்தகப் போர் தீவிரம் அடைந்தது. இதைத் தொடர்ந்து இரு நாடுகளும் கடந்த மே மாதம் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்தின. இதில் இரு நாடு களும் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு ஏதுவாக வரிவிதிப்பை பரஸ்பரம் 90 நாட்கள் நிறுத்தி வைக்க ஒப்புக்கொண்டன.

அப்போது சீனா மீதான வரி விதிப்பை 90 நாட்களுக்கு டொனால்டு ட்ரம்ப் நிறுத்தி வைத்தார். இரு நாட்டுப் பிரதிநிதிகளும் கடந்த ஜூலை மாத இறுதியில் ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் மீண்டும் சந்தித்தனர். என்றாலும் அப்போது இரு நாடுகள் இடையே உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. இந்நிலையில் 90 நாள் கெடு திங்கட்கிழமை முடிவடைவதற்கு சில மணி நேரத்துக்கு முன், சீனா மீதான வரி விதிப்பை மேலும் 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார். (எ)

# ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது எப் - 16 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதா?

### பாகிஸ்தானிடம் கேட்குமாறு அமெரிக்கா பதில்

வாஷிங்டன், ஓக. 15

இந்திய இராணுவத்தின் ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது எப் - 16 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதா? என்ற கேள்விக்கு பாகிஸ்தானிடம் கேட்குமாறு அமெரிக்கா பதிலளித்துள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாத முகாம்கள் மீதான ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்தியாவின் தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ மற்றும் விமானப் படைத் தளங்கள் சேதமடைந்தன. இதில் அமெரிக்க நிறுவன தயாரிப்பான எப்-16 உள்ளிட்ட போர் விமானங்களும் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், பாகிஸ்தானின் 6 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக இந்திய விமானப் படைத் தளபதி சமீபத்தில் கூறியிருந்தார். இதில் எப்-16 ரக விமானமும் அடங்கும்.

இந்த நிலையில், தொலைக்காட்சி நிறுவனம் சார்பில், அமெரிக்க தகவல் சுதந்திர சட்டத்தின் கீழ் (எப்.ஓ.ஐ.ஏ) அந்த நாட்டு வெளிவிவகாரத் துறை மற்றும் பாதுகாப்புத் துறையிடம் சில கேள்விகளை கேட்டிருந்தது. குறிப்பாக, ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது எப்-16 ரக விமானங்கள் சேதமடைந்தது தொடர்பான விவரங்கள் கேட்கப்பட்டிருந்தன. இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க அமெரிக்கா மறுத்துவிட்டது. அத்துடன் இதுபற்றி பாகிஸ்தான் அரசிடம் கேட்குமாறு தெரிவித்துள்ளது. (எ)

# அகதிகள் படகு கடலில் கவிழ்ந்தது 20 பேர் பலி!

ரோம், ஓக. 15

அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலியாகினர்.

கடலில் மூழ்கிய 60 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை தேடி ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக கடல் வழியாக சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

இந்த நிலையில், ஆபிரிக்க நாடுகளில் இருந்து 97 பேர் லிபியாவில் இருந்து படகில் மத்திய தரைக்கடல் வழியாக நேற்று ஐரோப்பிய நாடுகளுக்குள் அகதிகளாக நுழையும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர்.

அகதிகள் பயணித்த படகு இத்தாலியின் லெபிடுசா தீவு அருகே சென்றபோது திடீரென கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த அனைவரும் கடலில் மூழ்கினர்.

இது குறித்து தகவலறிந்த இத்தாலி கடற்படையினர் சம்பவம் இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில் 60 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்தச் சம்பவத்தில் 20 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். (எ)

# பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் அமெரிக்கா - பாகிஸ்தான் இணைவு



இஸ்லாமாபாத், ஓக. 15

முக்கிய பயங்கரவாத குழுக்களை எதிர்கொள்வது உள்ளிட்ட தீவிர நடவடிக்கைகளில் பாகிஸ்தான் - அமெரிக்கா இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

பயங்கரவாத அமைப்புகளை எதிர்கொள்வது தொடர்பில் அமெரிக்கா - பாகிஸ்தான் இடையே விசேட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா சார்பில் பங்கேற்ற குழுவுக்கு அதன் வெளிவிவகாரத் துறையின் பயங்கரவாத எதிர்ப்புக்கான செயல் ஒருங்கிணைப்பாளர் கிரிகோரி டி லோஜெர்போ தலைமை தாங்கினார். பாகிஸ்தான் குழுவுக்கு, அந்த நாட்டின் ஐ.நா. சிறப்பு செயலாளர் நபீல் முனீர் தலைமை தாங்கினார்.

இரு குழுவினருக்கும் இடையே நடைபெற்ற நீண்ட நேர பேச்சுவார்த்தையை அடுத்து, கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில், "பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் எதிர்த்துப் போராடுவதில் பாகிஸ்தானும் அமெரிக்காவும் உறுதியாகவுள்ளன. பலுசிஸ்தான் விடுதலை இராணுவம், ஐ.எஸ். ஐ.எஸ். - கோராசன், தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தேவையான அணுகுமுறைகளை வளர்ப்பது முக்கியம் என்பதை இரு நாடுகளும் உணர்ந்துள்ளன"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியா, பாகிஸ்தானுடனான எங்கள் உறவு நன்றாகவுள்ளது

### அமெரிக்க வெளிவிவகாரத்துறை

வாஷிங்டன், ஓக. 15


இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனும் அமெரிக்காவின் உறவு நன்றாக உள்ளது என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் செய்தித் தொடர்பாளர் ரொமி புரூஸ் கூறுகையில், "இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனும் அமெரிக்கா இணைந்து பணியாற்றுவது பிராந்தியத்துக்கும் உலகிற்கும் ஒரு நல்ல செய்தி. இது நன்மை பயக்கக்கூடிய எதிர்காலத்தை உருவாக்கும்.

இரு நாடுகளுடனும் எங்கள் உறவு முன்பு போலவே உள்ளது, அது நல்லது என்று நான் கூறுவேன். அனைவரையும் அறிந்த, அனைவரிடமும் பேசும் ஒரு அதிபர் இருப்பதனால் ஏற்பட்ட நன்மை இதுதான். இதன் மூலமாக நாம் கருத்து வேறுபாடுகளை சரிசெய்ய முடியும் எனவே, நமது இராஜதந்திரிகள் இரு நாடுகளிடமும் நல்ல உறவை பராமரிக்க உறுதிபூண்டுள்ளனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மே மாதம் இடம்பெற்ற மோதல் மிகவும் பயங்கரமான ஒன்றாக வளர்ந்திருக்கும். துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வெளிவிவகாரத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ ஆகியோர் இந்த விவகாரத்தில் உடனடி அக்கறை காட்டி தாக்குதல்களை நிறுத்தினர். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பேரழிவைத் தடுப்பதில் அமெரிக்காவின் உயர்மட்டத் தலைவர்கள் முக்கிய பங்கு வகித்தனர்" -என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சின்சினாட்டி ரென்னிஸ் கச்சனோவ் முன்னேற்றம்

சின்சினாட்டி, ஒக. 15

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் கரேன் கச்சனோவ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் முன்னணி வீரரான கரேன் கச்சனோவ் அமெரிக்காவின் ஜென்சன் ப்ருக்ஸ்பி உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய கரேன் கச்சனோவ் 6-3, 6-3 என்ற நேர் செற் கணக்கில் ஜென்சன் ப்ருக்ஸ்பியை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# லக்னோ அணியிலிருந்து சஹீர்கான் விலக முடிவு

புதுடில்லி, ஒக. 15

லக்னோ அணியின் ஆலோசகர் பதவியில் இருந்து சஹீர் கான் விலக முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ. பி. எல். 18ஆவது சீசனில் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி கிண்ணத்தை வென்றது. இந்த சீசனில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் ஆலோசகராக இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஜாகீர் கான் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து லக்னோ அணி வீரர்களுக்கு ஒவ்வொரு போட்டிகளின்போதும் சஹீகீர் கான் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இருப்பினும் லக்னோ அணி, பிளேஓப் சுற்றுக்கு கூட முன்னேற முடியாமல் தொடரில் இருந்து வெளியேறியது. இதனையடுத்து லக்னோ அணி நிர்வாகம் எஸ்.ஏ. 20 லீக் தொடர், ஹண்ட்ரட் லீக் தொடர்களில் முதலீடு செய்ய தொடங்கியது. இதனையடுத்து 3 அணிகளை கவனிக்கும் வகையில் ஒருவரை தலைமை பொறுப்புக்கு கொண்டுவர லக்னோ அணியின் உரிமையாளர் சஞ்சீவ் கொயங்கா முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஐ.பி.எல். கிரிக்கெட்டில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் ஆலோசகராக பணியாற்றிய சஹீர்கான் அந்தப் பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. லக்னோ அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக பரத் அருண் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில், புதிய ஆலோசகரை தெரிவு செய்யும் பணியில் லக்னோ அணி நிர்வாகம் இறங்கியுள்ளது. (எ)







## சின்சினாட்டி ரென்னிஸ் அடம் அதிர்ச்சி தோல்வி

சின்சினாட்டி, ஒக. 15

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் அடம் வால்டன் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியாவின் அடம் வால்டன் - செக் குடியரசின் ஜிரி லெஹெக்கா உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ஜிரி லெஹெக்கா 7-6 (7-5), 7-6 (7-3) என்ற செற் கணக்கில் அடம் வால்டனை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட அடம் வால்டன் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

## சின்சினாட்டி ரென்னிஸ் லூசியா அபார வெற்றி

சின்சினாட்டி, ஒக. 15

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் லூசியா ப்ரோன்செட்டி 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இத்தாலியின் லூசியா ப்ரோன்செட்டி- லாத்வியாவின் ஜெலினா ஒஸ்டாபென்கோ உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபாரமாக செயல்பட்ட லூசியா ப்ரோன்செட்டி 1-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் ஜெலினா ஒஸ்டாபென்கோவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)





## ஒருநாள் தரவரிசையில் 2ஆம் இடத்தில் ரோஹித்

டுபாய், ஒக. 15

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மேற்கு இந்திய தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரையடுத்து ஐ. சி. சி. தரவரிசையை வெளியிட்டுள்ளது. மேற்கு இந்திய தீவுகள் அணியுடனான தொடரில் பாபர் அஸாம் 3 போட்டிகளில் 56 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இதனால் 751 புள்ளிகளுடன் 3ஆவது இடத்துக்கு சரிந்துள்ளார். ரோஹித் சர்மா 756 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஒருநாள் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் 784 புள்ளிகளுடன் இந்திய அணியின் துணைத் தலைவர் சுப்மன் கில் முதல் இடத்தில் நீடிக்கிறார். நட்சத்திர வீரர் விராட் கோலி 4ஆவது இடத்திலும் ஸ்ரேயஸ் ஐயர் 8ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர். (எ)

## அல்காரஸ் அசத்தல்

சின்சினாட்டி, ஒக. 15

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார் அல்காரஸ்.

இந்த ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ், செர்பியாவின் ஹமாத் மெட்ஜெடோவிக் உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய அல்காரஸ் 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் ஹமாத் மெட்ஜெடோவிக்கை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)




### சூதாட்ட செயலி வழக்கு

# விசாரணைக்கு ஆஜராகுமாறு சுரேஷ் ரெய்னாவுக்கு அழைப்பு

புதுடில்லி, ஒக. 15

ஒன்லைன் சூதாட்ட செயலி வழக்கு தொடர்பில் நடிகர்கள் பிரகாஷ் ராஜ், ராணா டகுபதி, விஜய் தேவரகொண்டா ஆகியோருக்கு அமுலாக்கத்துறை அழைப்பாணை அனுப்பி விசாரணை நடத்தியது. சூதாட்ட செயலியை விளம்பரப்படுத்துவதன் மூலம் பெரிய அளவிலான பரிவர்த்தனைகள் செய்யப்பட்டதா மற்றும் அது பண மோசடியுடன் தொடர்புடையதா? என்ற கோணத்தில் அமுலாக்கத்துறை விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், ஒன்லைன் சூதாட்ட செயலியுடன் தொடர்புடைய பண மோசடி வழக்கில் இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னாவுக்கு அமுலாக்கத்துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது. இந்த விசாரணையில் சுரேஷ் ரெய்னாவிடம் வாக்குமூலம் பெற அமுலாக்கத்துறை திட்டமிட்டுள்ளது. (எ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்தின்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மாகாண சபைகள் தேர்தல் விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தேர்தல் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

நீதியானதும் சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் தேர்தலை சிறந்த முறையில் நடத்துவோம். கடந்த 09 மாத காலத்துக்குள் மூன்று தேர்தல்களை சிறந்த முறையில் நடத்தினோம்.

மாகாண சபைகள் தேர்தல் முறையில் காணப்படும் சட்டச் சிக்கலால் ஆணைக்குழுவால் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க முடியாது தடை காணப்படுகிறது.

இந்தப் பிரச்னைக்கு பாராளுமன்றம் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மாகாண சபைகள் தேர்தல் முறையில் காணப்படும் சட்டச் சிக்கல் மற்றும் அவற்றுக்கான தீர்வு குறித்து உயர்நீதிமன்றம் பலமுறை வியாக்கியானமளித்துள்ளது.

நடைமுறை தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களில் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றமை வரவேற்கத்தக்கது - என்றார்.

## ராஜிதவின்....

ராஜித சேனாரத்ன தங்கியிருந்தார் என்று கூறப்படும் பல இடங்களுக்குக் கடந்த சில நாட்களாக அவரை கைது செய்யச் சென்றபோதிலும் கைது செய்ய முடியவில்லை என்று கூறப்படுகிறது. இதனாலேயே, அவரின் சொத்துகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

முன்னதாக, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டது. அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்த நிலையில், அவரின் சொத்துகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதையடுத்து, அவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆதனவரி....

முன்னதாக கடந்த சபை அமர்வில் ஆதனவரயை குறைக்குமாறு எதிர்க்கட்சி கள் கோரிக்கை விடுத்திருந்தன. இதனால், சபையில் குழப்பம் ஏற்பட்டது. இதையடுத்தே விசேட அமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிலையில், நேற்றைய தினம் நடந்த விசேட அமர்வு குழுநிலை விவாதமாக நடந்தது.

இதன்போது, எதிர்க்கட்சியினர் ஆதனவரியை குறைக்க வேண்டும் மக்கள் மீது வரிச்சுமையை ஏற்படுத்தக் கூடாது. சில வட்டாரங்களில் உள்ள மக்கள் இதனால் கடுமையாக பாதிப்படைவார்கள் என்றும் வலியுறுத்தினர்.

மாநகர சபையின் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவதற்கு நிதி பற்றாக்குறை உள்ளது, ஊழியர்களின் சம்பளம் போன்றவற்றை சுட்டிக்காட்டி ஆதனவரியை குடியிருப்புக்களுக்கு 8 வீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு 10 வீதமாகவும் அறவிடவேண்டிய தேவை இருக்கிறது என்று ஆளும் தரப்பு தெரிவித்தது. எனவே, இதன் அடிப்படையிலேயே ஆதனவரி அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன், அடுத்த வருடம் இதில் மாற்றம் செய்ய முடியுமா என்பது குறித்து ஆராயலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## செஞ்சோலை...

பங்கேற்றனர்.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ஆம் திகதி விமானப் படையினர் செஞ்சோலை வளாகத்தின்மீது நடத்திய தாக்குதலில் முதலுதவி பயிற்சியில் ஈடுபட்டிருந்த 61 மாணவியர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொலிஸ்...

வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் அனைவரும் சமமானவர்கள். குற்றங்களுக்கு எதிராக செயல்படுவதே பொலிஸ் திணைக்களத்தின் மிக முக்கிய நோக்கமாகும். நம்பிக்கையு டன் வாழக்கூடிய அமைதியான சூழலை உருவாக்குவதும் அதனை யதார்த்தமாக்குவதுமே நான் உட்பட பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பாகும். அதனை நிறைவேற்ற நான் எதிர்பார்க்கிறேன்.

நாட்டில் வாழ முடியாத மற்றும் தனது பெயரில் வாழ முடியாத போதைப்பொருள் கடத்தல்காரர்கள் வெளிநாட்டில் தலைமறைவாகி நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல் களை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை காலமும் கிடைக்கப்பெற்ற அரசியல் அடைக்கலத்தை பயன்படுத் தியே அவர்கள் அதனை செய்து வந்த னர்.

இதற்காக அவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், முப்படைகளில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் சில பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பயன்படுத்தி கொள்கிறார்கள்.

நாம் இது தொடர்பில் தகவல்களை திரட்டியுள்ளோம். குற்றவாளிகளுக்கு தற்போது அரசியல் பாதுகாப்பு இல்லாமல் போயுள்ளது. இதற்கு முன்னர் தமக்கு அரசியல் பாதுகாப்பை வழங்கியவர்களை பயன்படுத்தி தமது செயல்பாடுகளை முன்னெடுக்க தற்போது முயற்சிக்கின்றனர். இது தொடர்பில் நாம் ஆராய்ந்து எதிர்காலத்தில் தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

பொலிஸில் குற்றச்செயல்களில் ஈடுபடும் பலர் இருந்தனர். ஆனால், எனது பதவி காலத்தில் இவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெறாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. பொலிஸ் அதிகாரி ஒருவர் குற்றச்செயலில் ஈடுபட்டால் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவோம்.

இதேபோன்று பொலிஸார் ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டும். பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் நான் முன்னெடுப்பேன். எமது அதிகாரிகள் தவறிழைத்திருந்தால் பொதுமக்களுக்கு சேவை வழங்க பின்னிற்பார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க ஒருபோதும் தயங்கபோவதில்லை.

பொலிஸாரால் மக்களுக்கு கடமை ஆற்றப்படவில்லையெனில் அது தொடர்பில் முறையிடுவதற்கும் பொலிஸ் தொலைபேசி இலக்கமொன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். அதன் ஊடாக எனக்கு தகவல்களை அனுப்பலாம். குற்றச்செயல்களை தடுக்க திட்டங்களை வகுத்துள்ளோம். வெளிநாட்டில் தலைமறைவாகியிருந்த 11 பேரை நாட்டுக்கு அழைத்து வந்து சிறையில் அடைத்துள்ளோம்.

எதிர்காலத்தில் அவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முடியாதவாறு அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுப்போம். இலங்கை பொலிஸார் தொடர்பில் சர்வதேச ரீதியில் நன்மதிப்பு உள்ளது. ஆனால், பொலிஸில் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது - என்றார்.

## 1,391 சுற்றுலா...

பணிபுரிகின்றனர்.

இந்த சொகுசுக் கப்பல் 2023ஆம் ஆண்டில் 9 தடவைகளும் 2024இல் 6 தடவைகளும் இலங்கைக்கு வந்துள்ளது. இந்த நிலையில் இன்றைய தினம் யாழ்ப்பாணம் வரும் குறித்த கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதியும் மீண்டும் வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மேலும்....

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக் கவும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இதனிடையே, எதிர்வரும் 20ஆம் திகதி அகழ்வுப் பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த இடத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருப்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதனால், தற்போது வழங்கப்பட்ட அனுமதிக்கு மேலதிகமாக அகழ்வு பணிக்கு 8 வாரங்கள் அவகாசம் சட்ட மருத்துவ அதிகாரியால் கோரப்பட்டது.

சித்துப்பாத்தி மயானத்தில் கடந்த 4ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஸ்கான் பரிசோதனை அறிக்கை உள்ளிட்டவற்றின் அறிக்கையின் அடிப்படையிலேயே சட்ட மருத்துவ அதிகாரி மேற்படி கோரிக்கையை முன்வைத்தார் என்று தெரிகிறது. இதையடுத்து, அகழ்வுக்கான பாதீடுகளை தயாரித்தல் உள்ளிட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதேசமயம், அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் கண்டறியப்பட்ட இரு மனிதப் புதைகுழிகளில் மொத்தமாக 41 நாட்கள் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு இதுவரை, 147 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அத்துடன், 133 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதைகுழி...

தொடர் நிலம்) சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள் தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதி வான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன் மேற்படி வாதத்தை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது தெரிவித்தவை வருமாறு,

புதைகுழி அகழ்வு பணிகளில் சர்வதேச நிபுணத்துவ உதவிகளை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மரபணு சோதனைகளை முன்னெடுக்கவேண்டும். தற்போது அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படும் வேளைகளில் , குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், பாதிக்கப்பட்ட தரப்பினர், மயான அபிவிருத்தி சபையினர் உள்ளிட்ட தரப்புகளிடம் வாக்கு மூலங்களை பெற்று வருவது அச்சுறுத்தும் செயல்பாடாகும். எனவே, குற்ற புலனாய்வு பிரிவினர் அவ்வாறான செயல்பாட்டை நிறுத்த வேண்டும்.

செம்மணியில் மாணவி கிருசாந்தி படுகொலை வழக்கின் மரணதண்டனை கைதியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் இராணுவ அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் உள்ளது. அந்த வழக்கை யாழ் . நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்றி, தற்போது நடைபெறும் அரியாலை - சித்துப்பாத்தி புதைகுழி வழக்குடன் சேர்த்து விசாரிக்க வேண்டும்.

அந்த வழக்கில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்லக் கூடிய ஏது நிலை காணப்படுகிறது. இதனால், அந்த வழக்கு இப்போதைய வழக்குடன் இணைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றும் கோரினார்.

இது தொடர்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது. (ஐ)

## சபாநாயகருக்கு...

எந்தக் காரணமும் இல்லாமல் தனது உரைகளில் குறுக்கிடுவது கடுமையான குற்றம். இந்த விடயம் தொடர்பாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையிலும் முறைப்பாடு செய்யவுள்ளார் என்றும் அர்ச்சுனா கூறியுள்ளார்.

## ஹர்த்தாலை...

- கயவன் அழைக்கிறான். மத மாற்றி அழைக்கிறான். கடைகெட்ட அயோக்கியர்களே துணை - அல்பிரட் துரைப்பாவுக்குத் துணையான அயோக்கியர்கள் ஆபிரகாம் சுமந்திரனுக்கும் துணை.

கஞ்சா மயக்கத்தில் குளத்தில் வீழ்ந்தவன் இறந்தான் - கண்ணிவெடியில் இறந்ததாகக் கடைகெட்ட கயவர்கள் கூறுகிறார்கள். தமிழ்த் தேசியத்தைக் கையில் எடுத்த தமிழ்த் துரோகிகளின் கூட்டம். இயேசு சொன்னது போல் ஆட்டுத் தோல் போர்த்த ஓநாய்க் கூட்டம்.

தந்தை செல்வா பூந்தோட்டம் அமைத்தார். அமிர்தலிங்கம் மாலை தொடுத்தார். பின் வந்தவரிடம் பூக்களும் மாலைகளும் குரங்குகள் கைகளில். அனைத்து உலக மத மாற்றும் மாணவர் பேரவையின் International fellowship of Evangelical students நிதி வளங்களில் சாவித்திரி சுமந்திரனின் மதமாற்று முயற்சிகளுக்குத் துணை போகும் மெதடிஸ்த திருச்சபையின் மேனாள் இணை ஆயரான கணவனின் கட்சியாகத் தமிழ் அரசுக் கட்சி மாறியதே?

அர்த்த சாத்திரத்தில் சாணக்கியர் கூறியதைக் கைக்கொள்ள வேண்டியவர் விவிலியத்தில் கூறியதைக் கைகொண்டு தமிழ் அரசு கட்சியைக் கிறிஸதவக் கட்சியாக மட்டக்களப்பை மத மாற்றுவாரோ?

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு திருக்கேதீச்சர மகா சிவராத்திரி வரவேற்பு வளைவை உடைத்ததாக நீதிமன்றத்தின் முன் நிற்கும் பாதிரியார் தலைமையில் மன்னாரின் வளர்ச்சியைத் தடுக்கும் கொடுமுயற்சி நடைபெறுகிறதே?

வடக்கு வளரக்கூடாது - வாழக் கூடாது. கிழக்கு உயரக்கூடாது - எழுச்சி பெறக்கூடாது. மதமாற்றிகளின் திட்டம். விவிலியத்தைக் கையில் எடுத்தோரின் திட்டம். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் விட்டுச் சென்ற எச்சங்களின் திட்டம். வத்திக்கானின் அடிவருடிகளின் திட்டம்.

சுமந்திரனின் மனைவி சாவித்திரிக்கு ஆண்டுதோறும் கோடி கோடியாகக் கொட்டுகிறார்கள் இங்கிலாந்தில் இருந்து மதம் மாற்ற முயற்சிக்கு. கணக்குத் தரவா? நீங்களே International fellowship of Evangelical students இணைய தளத்தில் பார்க்கிறீர்களா?

மன்னார் ஆயருக்கு வத்திக்கான் வழங்குகிற கோடி கோடியான நிதித் தொகைக் கணக்குகளை கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளிப்படுத்துவாரா? மன்னாரில் அரசு சாரா நிறுவனங்களை நடத்தும் பாதிரிகள் கணக்குகளை மக்களுக்கு வழங்குவார்களா?

தேசியப் போர்வையில் நுழைந்த (ஆட்டுத் தோலில் நுழைந்த ஓநாய்களுக்கு) துரோகிகளுக்கு வாக்களிக்க மாட்டோம் என வடக்கிலும் கிழக்கிலும் வாக்காளர் சொன்னார்கள். தமிழ்த் தேசியம் சொல்லாத வேட்பாளர்களுக்குப் பெருமளவில் வாக்களித்துத் துரோகிகளுக்குத் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டினார்கள்.

வடக்கின் வாணிபர்களே கிழக்கின் வணிகர்களே வடக்கையும் கிழக்கையும் வளங் கொழிக்கும் மண்ணாக மாற்றுவோம். கடைந்தெடுத்த கயவர்களின் கடையடைப்பு அழைப்பை புறக்கணியுங்கள். வடக்கின் வளர்ச்சியையும் கிழக்கின் எழுச்சியையும் காணக் கடைகளைத் திறந்து வழமை போல் வணிகத்தில் ஈடுபடுங்கள். துரோகிகளைக் கண்டால் தூர விலகுங்கள். ஆட்டுத் தோல் போர்த்த ஓநாய்க் கூட்டத்தை ஓட ஓட விரட்டுங்கள் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சர்வதேச விசாரணைக்கு எவ்வித அவசியமுமில்லை

## அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, ஒக. 15

**சர்வதேச விசாரணைக்கு எவ்வித அவசியமும் இல்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.ஐக்கிய நாடுக ளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ரேர்க், வெளியிட்ட அறிக்கை குறித்து பதிலளித்த போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்தார்.**

அத்துடன், தற்போதைய அரசியல் நிலவரங்கள் உள்ளிட்ட பல விடயங்களையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

இதன்படி, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை குறித்து கருத்துரைத்த அவர், கடந்த அரசாங்கத்தின் கீழ் சர்வதேச விசாரணைக்கான தேவை ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அதற்கான தேவை ஏற்படவில்லை எனக் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து தெளிவான விளக்கத்தை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு மனித உரிமை மீறலும் இடம்பெறவில்லை என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக் காட்டினார்.

எனவே, செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் ஏதேனும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால், உள்ளக விசாரணையின் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

அத்துடன், செம்மணி விவகாரத்தையும் தற்போதைய அரசாங்கம் மூடி மறைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

செம்மணி மனித புதைகுழி, விடுதலை புலிகளின் கீழும் இராணுவத்தின் கீழும் இருந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

ஆகவே, செம்மணியில் கிடைக்கும் மனித என்புக்கூடுகள் எந்த காலத்துக்கு உரியது என்பதை கண்டறியவேண்டும். அதன்பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆனால், இவற்றுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்க முடியாது என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார். (அ)

## வலி.வடக்கில் விவசாயம் செய்ய அனுமதியுங்கள்!

### மீள்குடியேற்ற சங்கத்தினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 15

வலி.வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவித்து மக்கள் சுதந்திரமாக விவசாய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத்தினர் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

போர் முடிவடைந்து 16 வருடகாலமாக பாதுகாப்பு காரணங்களுக்காக என்று கூறி தனியார் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ள இராணுவத்தினர் அதில் விவசாயம் செய்கின்றனர். காணி உரிமையாளர்கள் விவசாயம் செய்ய முடியாது வறுமையில் வாடுகின்றனர்.

தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து விவசாயம் செய்வது சட்டவிரோதமானது. அது மாத்திரமின்றி மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் இராணுவத்தினர் எவ்வாறு விவசாயம், பண்ணை, வியாபாரத்தை நடத்தி வருமானத்தை பெற முடியும்? அவ்வாறு பெறப்படும் பணம் எங்கே செல்கிறது ? அந்த பணம் திறைசேரிக்கு அனுப்பப்படுகிறதா?.என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

போர் முடிந்தும் 16 வருடங்களாக தனியார் காணிகளை படையினர் அடாத்தாக பிடித்து விவசாயம் செய்து வருமானம் ஈட்டி வருவதால் காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும்.

இதேநேரம், எமது காணிகளை விடுவித்து விவசாய நடவடிக்கையை முன்னெடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்ட பலாலி வீதியில் மக்கள் சுதந்திரமாக பயணிக்க அனுமதி வழங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை பௌத்த நாடு என்பதை கர்தினால் ஏற்றுக் கொண்டுள்ளார்

### அமைச்சர் ஹினிதும சுனில் செனவி

கொழும்பு, ஒக. 15

கர்தினால் மல்கம் ரஞ்சித்தால் அரசாங்கத்துக்கு எந்த விதமான அழுத்தங்களும் கிடையாது என புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

கர்தினால் தமக்கே உரித்தான கருத்துக்களைத் தெரிவித்திருப்பதோடு, இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதைத் தெளிவாகவும், பொது மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-கர்தினால் நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றம், மக்கள் வாழ்க்கைத் தரம் மற்றும் நாட்டின் பொதுப் போக்குகள் குறித்த விரிவான பார்வையையும் கொண்டுள்ளார்.

இதனால், அவரின் கருத்துகள் அரசின் நடைமுறைகளைப் பாதிக்கவில்லை.

அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் சுதந்திரமாகவும், சட்டத்திற்கேற்பவும் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (அ)

## இலங்கைக்கு வருகை தரும் இந்திய அரசியல்வாதிகள்!

கொழும்பு, ஒக. 15

இலங்கையில் இடம்பெறவுள்ள தனியார் நிகழ்வொன்றில் கலந்துகொள்ள இந்தியாவின் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் சினிமா நட்சத்திரங்கள் வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாகத்திய அக்கடமி விருது பெற்றவரும், இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சஷி தரூர், மத்திய பெண்கள், சிறுவர்கள் மேம்பாடு மற்றும் சிறுபான்மை விவகார அமைச்சர் ஸ்மிருதி இராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், பொலிவுட் திரை நட்சத்திரங்களான, அக்ஷய் குமார் மற்றும் அஜய் தேவ்கன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இன்று முதல் இரு நாள்கள் கொழும்பில் நடைபெறவிருக்கும் தனியார் நிகழ்வொன்றிலேயே இவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## படைமுகாம்களை தேவையில்லாது அகற்ற வேண்டிய அவசியமில்லை!

கொழும்பு, ஒக. 15

இராணுவ முகாம்களையோ அல்லது காவல் நிலையங்களையோ தேவையில்லாமல் அகற்ற வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு இராணுவ முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

## வாக்காளர் பதிவு செய்யப்படாமையால் வாக்குரிமையை இழக்கும் அபாயநிலை

### தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 15

பல்வேறு காரணங்களினால் வாக்காளர்கள் பதிவு செய்யப்படாமையால், அவர்கள் தங்களது வாக்குரிமையை இழப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹற்றன், டிக்கோயா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற, தேர்தல் ஆணைக்குழுவின் இலத்திரனியல் சேவை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வின் பின்னரே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள வாக்காளர்கள் இலகுவாக தேர்தல் ஆணைக்குழுவின் சேவையை பெறும் வகையிலேயே, தற்போது இலத்திரனியல் சேவை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் சனத்தொகைக்கு மேலதிகமாக, கையடக்கத் தொலைபேசி பாவனை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே, அதனை பயன்படுத்தி அடிப்படை உரிமையான வாக்களிப்பு உரிமையினை பெறுவதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அவர் கூறினார். (அ)

## துறைமுகத்தில் தேங்கியுள்ள 400 கொள்கலன்கள் உப்பு!

### விடுவிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக. 15

கொழும்பு துறைமுகத்தில் 45 நாட்களாக தேங்கியுள்ள 400 கொள்கலன் உப்பை உடனடியாக விடுவிக்குமாறு இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிறுபோகத்திற்குப் பிறகு உப்பு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டமை மற்றும் 2024 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் ஏற்பட்ட பாதகமான வானிலை காரணமாக உப்பு உற்பத்தி இலங்கையில் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, இலங்கையால் உப்பு இருப்புக்களை பராமரிக்க முடியவில்லை.

இதனால் 185,000 மெற்றிக் தொன் உப்பு இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதித்தது. அதன் பிரகாரமே நாமும் உப்பை இறக்குமதி செய்தோம்.

என்றாலும், இவற்றை விடுவிப்பதில் பாரிய தாமதங்கள் உள்ளன.

உடனடியாக இவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## முல்லை நீராவியடிப் பிள்ளையார் ஆலய பகுதியில் புதிய பெயர்ப்பலகைக்கு தடை

முல்லைத்தீவு, ஒக. 15

முல்லைத்தீவு பழைய நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் உட்பட தொல்லியல் பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் புதிய பெயர்ப்பலகை எதனையும் நிறுவக் கூடாது என தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொக்கிளாய் பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, முல்லைத்தீவு நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.முல்லைத்தீவு பழைய நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இடம்பெற்று வருகின்றது.இந்தநிலையில், குறித்த உற்சவத்தின் இறுதியில் புதிய பெயர்ப்பலகை ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் மன்றில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த செயற்பாடு அந்த பகுதியில் வேறு மத வழிபாடுகளை மேற்கொள்கின்றவர்களுடன் முறுகல் நிலையை உருவாக்கும் என்றும், அதனால், அமைதியின்மை ஏற்படும் என்றும் பொலிஸார் மன்றுரைத்துள்ளனர்.

எனவே, அங்குப் புதிய பெயர்ப் பலகை நிறுவுவதை தடுக்கும் வகையில் உத்தரவு ஒன்றை பிறப்பிப்பிக்குமாறு கொக்கிளாய் பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org